Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 56

## தமிழர் வாழ்வியலில் தோற்கருவிகளும் பண்பாட்டு விழுமியங்களும்

*முனைவர். செ. வீரலட்சுமி*
*உதவிப்பேராசியர்,*
*தேவாங்கர்கலைக்கல்லூரி,*
*அருப்புக்கோட்டை.626101, விருதுநகர்மாவட்டம், தமிழ்நாடு.*
*மின்னஞ்சல்: veeralakshmisenniah@gmail.com*

### *முன்னுரை*

கி.பி.முதல் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையான சங்ககாலம் தமிழர் வரலாற்றில் “வீரயுகக்காலம்“ என அழைக்கப்படுகிறது. வீரயுக்கால மக்கள் திணைசார் வாழ்வியலில் கலை சார்ந்த நுண்ணிறவு பெற்று திகழ்ந்தமையை சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. அக்கால மக்கள் இன்ப, துன்பம், மனவுணர்வுகள் அனைத்தையும் இசை கொண்டாங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். ஒவ்வோர் திணைக்கும் உரிய இசைக்கருவிகள் அம்மக்களின் பண்பாட்டை எடுத்துரைப்பதாகவும் இருந்துள்ளன. நரம்பு, தோல், மிடற்றுக்கருவிகள் வேட்டைச் சமூகத்திலிருந்து தோற்றம் பெற்று தற்காலம் வரை மக்களின் மனமகிழ்ச்சிக்குரிய கருவியாக திகழ்கின்றன. இதனில் இசைமரபு நூல் நுவலும் பண், கருவிப்பகுப்பின் அடிப்படையில் தோற்கருவியான ஆஹதம் கருவிகள் (மத்தளம், பறை, தவில்) பண்பாட்டு தளத்தில் விழுமியங்களாக கருதப்படும் கருத்தியல்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

முனைவர். செ. வீரலட்சுமி

# தொல்காப்பியத்தில் இசை

" இசை, கலைகளுள் தொன்மையானது. கூவலும், விளியும், அரற்றும் மழலையும் அன்புமொழியும், பண்டமாற்றும் ஆகிய எல்லாம் இசை மருவின. குறில் நெடிலாகும் போதே இசைமை தோன்றிவிடுகிறது. நெடில் அளபெடையாய் நீளும் நீட்டத்திலும், விளியாக மேலும் கொள்ளும் நெட்டிசைப்பிலும் இசை கால்கொள்கிறது.

அளபிறத் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.'

என இசைத்தமிழ் நூலின் இருப்பினைத் தொல்காப்பியம் உரைக்கும். நரம்பின் மறைய என்றதால் தொல்லிசைக் கருவியாகிய யாழின் திறங்கூறும் இலக்கணப்பனுவல் என்பது போதரும். " [1] என்ற இசை குறித்தான செய்தியும்,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"[2]

எனத் தொல்காப்பிய, கருப்பொருள்களில் வரும் இசைக்கருவிகள் குறித்தான செய்தியும், இசையின் தொன்மையை எடுத்து மொழிபவையாக உள்ளன. தொல்காப்பியத்திற்கு முன்னரும், அதற்குப் பின்பான காலத்தில் எழுந்த இசைநூல்கள் பல . இசைநூல்கள் கூறும் இலக்கணமரபை அடிப்படையாகக் கொண்டு இசைக்கருவிகள் பல வகைமையாக பகுக்கப்பட்டுள்ளன. இசைமரபு, பஞ்சமரபு நூல்கள் இசைக்கருவிகள், அவற்றின் தாள கட்டமைப்பு, பயன்பாடு அவற்றின் வளர்ச்சிகளை குறித்துள்ளன.

# இசைக்கருவி வகைகள்

உந்தி முதலாகக் கொண்டு பிறந்த, காற்று நாதமாக, எழுத்தாகப் பிறப்பதான தன்மையில் இசைமரபு நூலார் நாத வகைகளை இரண்டாகப் பிரித்து அவ்விசையை தோற்றுவிக்கும் கருவிகளை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளனர்.

" நாதவகைகள்

**1.அனாஹதம்- மனித முயற்சியின்றித் தோன்றுவது யோகிகளுக்குப் புலனாவது.**

**2. ஆஹதம்- மனித முயற்சியால் தோன்றுவது.**

1. தோல்கருவி-மத்தளம்,பறை,தவில்,
2. துளைக்கருவி-சங்கு,குழல்,
3. நரம்புக்கருவி-வீணை, கோட்டு பிடில்,
4. கஞ்சக்கருவி-ஜாலர்,சேகண்டி,
5. மிடற்றுக்கருவி-மிடறு-தொண்டையின் மூலம் தோற்றுவிப்பது."[3] என இசைக்கருவிகளை வகைப்படுத்துகிறார். இதனில் தோற்கருவிகள் பண்பாட்டுடன்

கொண்ட தொடர்பும், அவை மக்களின் வாழ்வில் நிகழ்த்திய தாக்கங்களும் பலவாகும்.

## பறை

வேளாண் சமூகத்திற்கு முந்தைய வேட்டைச் சமூக காலத்தில் தோற்றியதாக கருதப்படுபவை தோற்கருவிகள். இவை விலங்குகளை வெருட்டுதற்கும், செரு கிளர்ச்சிக்கும், இரவெச்சரிக்கைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமூகப்பகுபாடு எனும் தன்மையை விடுத்து பண்பாட்டு பரவல் கருவியாக மக்களின் வாழ்க்கையில் பல்வேறு செய்திகளை அறிவிக்கும், அறிவுறுத்தும் கருவியாக நோக்கும் போது தோற்கருவிகளுக்கு சிறப்பிடம் உண்டு. தொல்குடி மக்களின் ஆதியிசைக் கருவியான பறை, "பறை " என்ற வினையடியாகக் கருதப்பட்டு, கலைகளின் வளர்ச்சி காலத்தில் இசைக்கருவியாகவும்,

மேட்டுக்குடிகள், உழைப்பவர்கள் என்ற பிரிவினை ஏற்பட்ட போது ஓர் இனம், நிறத்தின் குறியீடாகவும், இழிவு, அழுக்கு, கருப்பு என்ற பொருள் தரும் சொல்லாகவும் மாறிய கருவி. பண்டை காலம் தொட்டு பிற இசைக்கருவிகளை விட "பறை" சமூகத்தின் அன்றாட வாழ்வியல் தொழில்களில் ஊடகக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெருகி வரும் புனலை அடக்க, உழவு, அறுவடை போர்க்களச் செய்திகளை அறிவிக்க இயற்கை வழிபாடு, கூத்து விழாக்கள், இறப்பு நிகழ்வுகள் என பண்பாட்டுடன் பண்டை காலம் தொட்டு தற்காலம் வரை பல நிகழ்வுகளை மக்களுக்குத் தெரிவிக்கும் கருவியாக உள்ளது. பறை சமூகத்தின் பலநிகழ்வுகளில் ஒலிக்கப்பட்டமைக்கு தொகை நூல்களில் உள்ள பாடல்கள் சான்றாக உள்ளன. " குன்றக சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து. தொண்டகச் சிறுபறைக் குரவை அயர"[4] (திரு.மு-196-197), எனவும் , " நறவு நாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு, மான் தோற் சிறுபறை கறங்கக் கல்லென, வான் தோய் மீமிசை இயரும் குரவை"[5] (மலை-320-323) எனவும் குரவைக் கூத்தில் இசைக்கப்பட்டுள்ளது. பக்தியிலக்கிய காலத்தில் "நாராயணன் நமக்கு பறை தருவான்" என புகழப்பட்ட கருவி இருபதாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சமுதாயத்தில் கீழ்நிலை கருவியாகவும், அமங்கல நிகழ்வில் ஒலிக்கும் நாட்டார் கருவியாகத் தோற்றம் கண்டமை அதன் படிநிலை வீழ்ச்சியைக் காட்டுகிறது. இப்பண்பாட்டு படிநிலை வீழ்ச்சியின் தொடக்கம் பொற்காலம் என புகழப்படும் சங்க காலத்திலேயே தோற்றம் பெற்று, இக்கருவியை இசைத்தவர்கள் கீழானவர்களாகக் கருதப்பட்டமையை "துடி எறியும் புலைய, எறிகோல் கொள்ளும் இழிசின"[6] (புறம்-287) என்று புறம் குறிப்பதில் காணலாம்.

## மத்தளம்

மத்தளம் = மத்து+ தளம். மத்து என்பது ஓசையின் பெயர். இசைக்கருவிகளுக்கு எல்லாம் அடிப்படையானதால் மத்தளம் எனப் பெயர் பெற்ற கருவி, மூவிறைவர்க்கும் முழக்குவதை குறித்து அறிவானார் ,

"நான்முகனார் மத்தளம் சல்லி திருமால்" [7] என கூறும் இடத்து நான்முகன் இசைக்கும் கருவியாக மத்தளத்தை குறிப்பிடுகிறார். தண்ணுமை எனும் மத்தளம் , அடியாருக்கு நல்லார் கூறும் " பேரிகை, படகம், இடக்கை, இடுக்கை முதல் பெரும்பறை என மிக்க நூலோர் வரித்துரைத் தனரே"[8] எனத் தோற்கருவிகள் கூத்து நிகழ்வில் (வேத்தியல்,பொதுவியல், குரவைக்கூத்து) இசைக்கப்பட்டுள்ளது. பக்தியிலக்கிய காலத்தில் இசை வல்லார்களின் பண்ணமைப்பில் இசைக்கப்பட்ட போதிலும் இவை பெரும்பான்மையும் ஆலய வழிபாட்டுடனும், சமுதாய நிகழ்வுகளுடனும்

பயன்படுத்தப்பட்டு வரும் கருவியாக உள்ளது. ஆலய வழிபாட்டுடன் இணைந்தமையால் பறை போன்று தாழ்நிலைக்குச் செல்லாமல் பண்டுதொட்டு மதிப்புறு நிலையில் உள்ளது.

வருணாசிரம கோட்பாடில் உயர் நிலையினரால் சிவனின் தாண்டவ நிகழ்வில் இசைக்கப்படும் மதிப்புறு கருவியாக்கப்பட்டது. சிவத்தாண்டவ ஸ்லோகத்தில் மத்தளத்தின் ஓசையாக" டமட் டமட் டமட்தமன்னி நாதவட்டமாவயம்", " திமித்திமித் திமித்வ நன்ம்ருதங்கதுங்க மங்கள" என ஓசைநயம் கூறப்பட்டுள்ளது. நீண்ட நெடிய இசை பயணத்தில் சாமானிய மக்களின் கருவியாக அவை நிலைத்திருப்பதற்கு பண்பாட்டுடன் இணைத்துப் பேசப்படும் வாய்மொழி மரபு எனும் புராணக்கதைகளாகும்.

" சிவத்தாண்டவத்தின் போது சிவனின் உடுக்கையிலிருந்து மத்தளம், தண்ணுமை என்ற கருவிகள் தோன்றியது. அதில் மத்தளத்தை நந்திதேவர் இசைக்க சிவன் நடனமடினர்." [9]என இராமநாதன் அவர்கள் கூறும் பழமரபு கதையும், "சிவபக்தியில் திளைத்த இராவணன் தென்திசையிலிருந்து கைலாயம் நோக்கிச் சென்றான். கைலாயத்தை அடையும் போது அவன் கையிலிருந்து மத்தளத்தை இசைக்க, அதன் இசையில் மெய் மறந்த சிவன், அவன் கைலாயத்தின் தென்திசைக்குள் நுழைவதை காணாதிருந்தார். அதனைக் கண்ட பார்வதிதேவி சிவனை மோனநிலையிலிருந்து மீளச்செய்த போது, சிவன், இராவணனை கால்களினால் எட்டி உதைக்க மத்தளம் கீழே விழுந்தது"[10] என்ற கதைகளே மத்தளத்தை மக்களின் பண்பாட்டு இசைக்கருவியாக மாற்றுகிறது.

தவில்

“செந்தவில் சங்குடனே முழங்க" , "தவில் முரசு பறை திமிலை" எனத் திருப்புகழில் புகழப்படும் தவில், பஞ்ச மரபு நூல் கூறும் " தாவில் தடாரி" என்ற சொல்லும் தவிலின் பெருமையை எடுத்துரைக்கின்றன. "தவில் என்றால் மேளவகை எனப்பொருள் எழுதி, தவுல் என்பதும் தவில் என்பதும் ஒன்றே என்றும் கூறுகிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி."[11] என்ற கருத்தின் அடிப்படையில் உலக வழக்குச் சொல்லில் "மேளம்" என அழைக்கப்படும் தவில் மங்கல நிகழ்வில் நாதஸ்வரத்துடன் இசைக்கப்படுகிறது. “மங்கலம்" என்ற பொதுச்சொல் ஆக்கம், பொலிவு, நற்செயல், திருமணம். வாழ்த்து என்ற பொருளில் வழங்கப்படுகிறது. இறைவழிபாட்டில் கடவுளரின்

திருபள்ளி எழுச்சி முதல் இரவில் பள்ளி எழுந்தருளள் வரையும் , கர்நாடக இசை, பரதநாட்டியம் , நாட்டர்கலைகள் அனைத்திலும் தவில் இசை ஒலிக்கப்படுகிறது.

மேல்தட்டு மக்கள் முதல் கீழ்தட்டு மக்கள் வரை அனைவரும் பயன்படுத்தும் தவில், நாதஸ்வரத்துடன் இணைத்து இசைக்கப்பட்டாலும் நாதஸ்வர இசை நிகழ்ச்சியில் முதலில் தவில் இசைக்கப்பட்ட பின்னரே மற்றைய கருவிகள் இசைக்கப்படுவது தவிலின் சிறப்பை உணர்த்துகிறது.

புழங்கு பொருட்பண்பாடு

"புழங்கு பொருள் பண்பாட்டில் குறிப்பிட்ட சில வகையான பொருட்கள் அன்றாட வாழ்க்கை சார்ந்த, சமூக-பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு நேரடியாக உதவக் கூடியவையாக உள்ளவற்றை craft என்று வகைப்படுத்திக் கொண்டனர். மற்றொரு பிரிவானது அழகியல் சார்ந்த, மகிழ்ச்சி தருகிற, அலங்காரத் தன்மை கொண்டதாக இனங் கண்டு அதனை art என்று வகைப்படுத்திக் கொண்டனர்."[12] என்று மேலை நாட்டு பண்பாட்டு அறிஞர்களின் கருத்தை ஹென்றி கிளாசி கூறுகிறார். ஹென்றி கிளாசிக் எடுத்துரைக்கும் பண்பாட்டு கோட்பாட்டு கொண்டு நோக்கும் போதும் மேற்குறித்த மூன்று இசைக்கருவிகளும் பொருளாதாரச் செயல்பாட்டுடன் தொடர்பு கொண்டு இக்கருவிகளை இசைக்கும் கலைஞர்களுக்கு அன்றாட வாழ்வியலுக்கு பொருள் ஈட்டித் தருபவையாகவும், இசைநுணுக்கங்களை கற்ற இசைக் கலைஞர்களுக்கு அழகியல் சார்ந்து மகிழ்ச்சி தரும் கருவியாக திகழ்வதை காணமுடிகிறது. கால மாற்றத்தில் பறை பண்பாட்டில் ஒழிக்கும் நிலையில் மாற்றம் கொண்டாலும் அழிவு நிலைக்கு செல்லவில்லை. தற்காலத்தில் ஆண்.பெண் இருவரும் இக்கருவிகளை இசைப்பதன் மூலம் தமிழர் பண்பாட்டிலிருந்து இக்கருவிகள் அழிவு என்ற நிலைக்கு செல்லாது என்பது திண்ணம்.

# முடிவுரை

எத்தகைய பொருளும் ஒரு இனம் அல்லது குழு, ஒரு சமூகம் சார்ந்த மக்களின் பண்பாடு, பழக்கவழக்கத்துடன் தொடர்பு கொண்டு பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படும் போது அப்பொருள்கள் பிற கலைகளின் தாக்கத்தினால் அழிவு நிலைக்கு செல்வதில்லை. சிவவழிபாடு பெருந்தெய்வ நெறிக்கு உட்பட்டு அமையினும் சைவநெறியைப் பின்பற்றும் அனைத்து இனமக்களின் கடவுளாக வணங்கப்பட்டு, வழிபாட்டில் மத்தளம்,தவில் இசைக்கப்படுவதால் பண்பாட்டு மரபுக்கருவியாக தற்பொழுது வரை நிலைத்து நிற்கிறது.

பழமரபுகதைகள், புராணக்கதைகள் குறித்த தகவல்களைத் தெரிவிக்கும் வாய்மொழி மரபு கொண்டு நோக்கும்போது, மனிதன் தன் அனுபவத்தை, தான் அடைந்த இன்பநுகர்வை, மரபு எனும் பண்பாட்டுடன் இணைத்து, கோவில் பெருவிழாக்களில் மத்தள ஓசைக்கேற்ப ஆடல் கலைகளை நிகழ்த்தியமையே யாழ் போன்று மறைந்த

கருவியாக இல்லாமல் தற்காலத்தும் மங்கல நிகழ்விற்குரிய இசைக்கருவியாக மத்தளம் தவில் பரிணமித்துள்ளது.

## தொகுப்புரை

தமிழ் மக்கள் தங்கள் அகப்புற வாழ்க்கையில் பயன்படுத்திய இசைக்கருவிகள் அவர்களின் இசை குறித்தான நுண்ணறிவை விளக்குபவையாக உள்ளன. அரசு உருவாக்கம், வருணாசிர பாகுபாடுகள் இசைக்கருவிகள், இசைக் கலைஞர்களை வேறுபடுத்தினாலும், அவை பண்பாட்டு புழங்குப்பொருட்களாக மாறும் போது அவை கால மாற்றத்திற்கேற்ப ஒலிக்கும் தன்மையில் பரிணாம வளர்ச்சியையே அடைத்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. இலக்கியத்தில் கலையும் கலைகோட்பாடும், முனைவர். கு.வே.பால சுப்பிரமணியன் (உ.ஆ), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.1998.ப.எண்-75
2. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,தமிழண்ணல்,(உ.ஆ)மோனார் கிராபிக்ஸ், சென்னை ப.எண்-28
3. இசைமரபு-திரு.கா.சங்கரனார், நெல்லை சங்கீத சபா வெளியீடு, திருநெல்வேலி ,1968 ப.எண்-03
4. திருமுருகாற்றுப்படை, முனைவர்.இரா.மோகன்,(உ.ஆ), பத்துப்பாட்டு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.2011 ப.எண்-13
5. மலைப்படுகடாம், முனைவர்.வி.நாகராசன்,(உ.ஆ), பத்துப்பாட்டு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.2011 ப.எண்-376
6. புறநானூறு, புலியுர்கேசிகன்(உ.ஆ), பாரிநிலையம்,சென்னை,1999 .ப.எண்-333
7. பஞ்சமரபு,வீ.ப.கா.சுந்தரம்(உ.ஆ), கழக வெளியீடு, சென்னை, 1993. ப.எண்-330
8. சிலப்பகாரம்-மூலமும் .உரையும், அரும்பதவுரை. (உ.ஆ) வே.சாமிநாத ஐயர், கமர்சியல் அச்சுக்கூடம். சென்னை. 1920ப.எண்-107
9. மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும். லெ.ப.கருஇராமநாதன்(தொ.ப), யுனைடெட் பிண்டர்ஸ் லிமி. திருச்சி.1948.ப.எண்-03
10. 1https://isha.sadhguru,org
11. தமிழிசைஅரங்கக்கருவிகள்,தேவகிமனோகரன்,யுனைடெட் கிங்டம்,1997 .ப.எண்-87
12. தமிழர் மானிடவியல்.பக்தவச்சலபாரதி,அடையாளம்.பதிப்பகம்,திருச்சி.2015 ப.எண்-324